# Lady Doak College, Madurai - 2.

(An Autonomous Institution Affiliated to Madurai Kamaraj University)

**COLLEGE WITH POTENTIAL FOR EXCELLENCE**

**Re-Accredited by NACC with Grade 'A'**

**(CGPA 3.44) in 3rd Cycle**

1948 70 2018
PLATINUM JUBILEE

**2019**
**CALENDAR**




# DEPARTMENT OF HISTORY

டோக் பெருமாட்டி கல்லூரியின் வரலாற்றுத்துறை இளங்கலை இறுதியாண்டு பயிலும் மாணவிகளாகிய நாங்கள் எங்களது இளங்கலை பட்ட ஆராய்ச்சிக்காக திருப்பரங்குன்றம் பகுதியின் புனித நீர்நிலைகளைக் குறித்த ஆய்வினை கடந்த மூன்று மாதங்களாக "தானம்" அறக்கட்டளை மற்றும் "அவ்வை வட்டார களஞ்சிய குழு" வுடன் இணைந்து மேற்கொண்டோம்.

திரு+பரம்+குன்றம் = திருப்பரங்குன்றம். பரம் என்றால் பரம்பொருளான சிவபெருமான். குன்றம் என்றால் குன்று (மலை). திரு என்பது அதன் சிறப்பை உணர்த்தும் அடைமொழியாகத் திருப்பரங்குன்றம் என ஆயிற்று. திருப்பரங்குன்றம் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள மதுரை மாநகரின் ஒரு அங்கமாகும். மதுரை மாநகரின் தெற்கில் சுமார் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தொன்மையான நகரம் திருப்பரங்குன்றம். பாண்டிய நாட்டின் 14 சைவத் தலங்களில் திருப்பரங்குன்றமும் ஒன்று. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று சிறப்புகளையும் திருப்பரங்குன்றம் பெற்றுள்ளது. உலகின் தொன்மை வாய்ந்த மலைகளில் திருப்பரங்குன்றம் மலையும் ஒன்றாக வரலாற்று சான்றுகள் கூறுகின்றன. மலையின் மேல் பகுதியில் சுல்தான் சிக்கந்தர் பாதுஷா தர்ஹா அமைந்துள்ளது. நகரின் மையப்பகுதியில் மலையினை குடைந்து குன்றே கோவிலாக அமைந்துள்ள எழில்மிகு நகரம் பரங்குன்றம். திருப்பரங்குன்றத்தில் தெற்கு பகுதியில் குடைவரை கோவில் (அல்லது) உமை ஆண்டவர் கோவில் அமைந்துள்ளது. மிகவும் வரலாற்று புகழ்பெற்ற ஸ்தலமாக கருதப்படுகிறது. திருமுருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் முதற்படை வீடாக திருப்பரங்குன்றம் முருகன் கோவில் போற்றப்படுகிறது. உலகில் ஒரே மலையில் வடக்கேயும், தெற்கு பகுதியும் குடைவரைகளாக உள்ள அமைப்பாக திருப்பரங்குன்றம் காட்சியளிக்கிறது. இப்பரங்குன்றின் பெருமைகளை தேவாரம், திருப்புகழ், கந்தபுராணம் மற்றும் பிற்கால இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன. இவ்வூரில் எப்போதும் திருவிழாவின் ஓசை, முழக்கம், தனிமழை பொழியும் என வரலாற்றுப் பதிவுகள் போற்றி கூறியுள்ளன. இவை அனைத்தும் திருப்பரங்குன்றத்தின் தனிச்சிறப்பாகும்.

திருப்பரங்குன்றத்தின் பாரம்பரிய நீர்நிலைகள் :

"நீர்இன்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு"

எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்று, மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும். தற்போதைய நிலையை நம் முன்னோர்கள் அன்றே கூறியுள்ளனர். அதற்கான விடையையும் அன்றே நமக்கு கொடுத்து விட்டனர். அவற்றை குளங்கள், கண்மாய்கள், கிணறுகள் கட்டுவது மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். நம் முன்னோர்களின் வழியை நாம் பின்பற்றினால் இயற்கைக்கும் நமக்கும் பாதகம் இல்லாமல் நம்மால் வாழ முடியும்.

எங்களது ஆய்வின்போது திருப்பரங்குன்றத்தில் 22 நீர்நிலைகள் உள்ளது என்பதனை தெரிந்து கொண்டோம். இவற்றில் 16 நீர்நிலைகள் புனித தீர்த்தமாக போற்றப்படுகிறது என்பதையும் அறிந்து கொண்டோம்.

திருப்பரங்குன்றத்தில் உள்ள 22 நீர்நிலைகளில் 10 தீர்த்தங்களையும், 4 குளங்களையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளோம். அவற்றை இந்த ஆண்டுக்குறிப்பேடு மூலம் வெளிப்படுத்தியுள்ளோம்.

சரவணப்பொய்கை (புஷ்கரிணி)

1948




5.12.2019



# 2019

## January

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |


முருகனின் பிறப்பிடமான சரவணப்பொய்கை புராணங்களில் 'புஷ்கரிணி' என்று அழைக்கப்படும். சரவணப்பொய்கை பாவங்கள் போக்கும் புண்ணிய தீர்த்தமாக கருதப்படுகிறது. இந்த தீர்த்தத்திற்கு மேலும் பல புராண பெயர்களும் உள்ளது.

## வெள்ளியங்கிரி தீர்த்தம் (கல்யாண தீர்த்தம்)

5.12.2018



25.2.2019



# 2019

## February

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | | |

மலையின் வடக்கு திசையில் வெள்ளியங்கிரி வீதியில் அமைந்துள்ளது. ஆகையால் இதை வெள்ளியங்கிரி கிணறு என்று அழைப்பர். இங்கு திருக்கல்யாணம் காலத்தில் மக்கள் நீராடிச் சென்று சுவாமியை தரிசனம் செய்வார்கள்.

## லெட்சுமி தீர்த்தம்

**5.12.2018**



**25.2.2019**



# 2019

## March

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

இந்த தீர்த்தம் கோவிலின் வெளிப்புறத்தில் அமைந்துள்ளது. மாதவிடாய் நேரத்தில் பெண்கள் நீராடி செல்வார்கள். இப்பொழுது தீர்த்தத்தின் புனிதம் காக்க துவைத்தல், குளித்தல் போன்ற செயல்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

## காசி விஸ்வநாதர் தீர்த்தம் (பாதாள கங்கை)

காசி விஸ்வநாதர்



பால் சுனை



# 2019

## April

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

மலையின் மேல் பகுதியில் காசி விஸ்வநாதர் ஆலயத்தின் அருகே உள்ளது. இந்த தீர்த்தம் சங்கப்புலவரின் முதல்வரான நக்கீரர்க்கு என தோற்றுவிக்கப்பட்டது. கங்கைக்கு இணையான தீர்த்தமாக கருதப்படுகின்றது.

பால்சுனை கிணறு (க்ஷிர குண்டம்) : தற்போது பால்சுனை கண்ட சிவபெருமான் ஆலயம் உள்ள பகுதியில் மலையின் அடிவாரத்தில் வெண்மை நிறம் கொண்ட நீர் ஊற்று சுனையாக இருந்து பக்தர்களின் பிணி தீர்த்த சிறப்பு கொண்ட சுனை தீர்த்தம்.

## வைத்தியங்கிணறு (வைத்யஹஸாரம்)

1998



5.12.2019



# 2019

## May

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

இந்த தீர்த்தம் சரும நோய்களின்
நிவாரணமாக உள்ளது.

## அகஸ்தியர் கிணறு



## மேலமடை தீர்த்தம்



# 2019


## *June*

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

அகஸ்தியர் கிணறு : இது மலையின் வடபுறம் அமைந்துள்ளது. பிரசித்தி பெற்ற 16 தீர்த்தங்களில் இதுவும் ஒன்று.

மேலமடை தீர்த்தம் : மக்கள் முற்காலத்தில் மேலமடை நீரை குடிநீராக பயன்படுத்தினர். மேலமடை கிணறை முழுமையாக கட்டி முடிக்காத காரணத்தினாலும் சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தினாலும் கிணற்றை மூடிவிட்டு அதன் அருகே குடிநீர் தொட்டி அமைத்துவிட்டனர்.

சன்னாசி கிணறு
(ப்ரஹ்ம தீர்த்தம்,
ஞான தீர்த்தம்)



சாவடி கிணறு



# 2019

## *July*

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

சன்னாசி கிணறு : தற்போது அபிஷேகத்திற்கும் அன்னதானம் செய்வதற்கும் பயன்பட்டு வருகிறது.

சாவடி கிணறு : மலையின் வடக்கில் அமைந்துள்ள இந்த தீர்த்தம் முன்பு மக்களுக்கு முக்கியமான குடிநீர் ஆதாரமாக பயன்பட்டது. ஆனால் இப்போது மழை இன்மையாலும் சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தினாலும் பயன்பாட்டில் இல்லை

## வண்ணாம்பாறை குளம்

5.12.2019



25.2.2019



# 2019

## August

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

சரவணப்பொய்கைக்கு அருகில் வண்ணாம்பாறை அமைந்துள்ளது. திருப்பரங்குன்றத்தில் வசிக்கும் மிகுதியான மக்கள் இதை துணி துவைப்பதற்கு பயன்படுத்துகின்றனர். அதனால் இதற்கு வண்ணாம்பாறை குளம் என பெயர் வந்தது.

## பானங்குளம் கண்மாய்

5.12.2018



25.2.2019



# 2019

## September

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

கடந்த 8 வருடங்களாக இக்கண்மாயில் தண்ணீர் இல்லை. இந்த ஆண்டு தான் கண்மாயில் முழுமையாக தண்ணீரை காணமுடிகிறது. இக்கண்மாய் முழு நீர்மட்டம் அடைந்தால் இரண்டு முறை பயிர் அறுவடை செய்யலாம்.

பரங்கிமலை கண்மாய்

5.12.2018



25.2.2019



# 2019

## October

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

பரங்கிமலை கண்மாய் உமையாண்டவர் கோவில் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இக்கண்மாய் தண்ணீரை குடிநீராகவும், துணி சலவைக்கும் பயன்படுத்துகின்றனர்.

### தென்கரை கண்மாய்




# 2019

## November

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

திருப்பரங்குன்றத்தில் தென்கரை கண்மாய் மிகவும் நீளமாக காட்சியளிக்கப்படுகிறது. முன்பு இக்கண்மாயை மீன் பிடிக்கவும் விவசாயத்திற்கும் பயன்படுத்தினர்

திருப்பரங்குன்றம் பகுதியில் உள்ள
நீர் ஆதாரங்களின் வரைபடம்



# 2019

## December

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

ஏரி, குளம், ஆறு என்று ஒருசில நீர்நிலைகளைத்தான் இந்த தலைமுறைக்குத் தெரியும். ஆனால் தமிழகத்தில் நம் முன்னோர்கள் நாற்பதுக்கும் அதிகமான நீர் ஆதாரங்களை உருவாக்கி பராமரித்தனர். அந்த நீர் நிலைகளை புதுப்பித்து பராமரித்தால் போதும். தண்ணீர் பஞ்சம் தமிழகத்தில் தலையெடுக்காது.

**“நீர் நிலைகளை காத்து வரும் தலைமுறைகளைக் காப்போம்!”**